டிரஷரி இருக்க முடியாது. டாகுமெண்டைத் தயார்செய்து கொண்டு போய் கொடுத்தவுடன் இந்த சப்-ரிஜிஸ்ட்ரார்தான் அதற்கு எவ்வளவு ஸ்டாம்பு ஆகும் என்று நிர்ணயிக்கின்றூர். அப்படி நிர்ணயித்ததற்குப் பின்னுலேதான், ஸ்டாம்ப் பேப்பரை கணக்குப்போட்டு எவ்வளவு என்று வாங்குகிறுர்கள். டாக்குமெண்டு ரைட்டர் கெட்டிக்காரராக இருந்தால், அவரே எவ்வளவு ஸ்டாம்ப் வேண்டும் என்று சொல்லிவிடுவார். ஆகவே அதைத் தெரிந்துகொண்டு எழுத வேண்டும். அதன்பின் எங்கே டிரஷரி இருக்கிறதோ அங்கு போய்க் கொடுக்கவேண்டும். இது பொதுமக்களுக்கு இடையூருக இருக்கும். ஆகவேதான், சப்-ரிஜிஸ்ட்ராரே வசூல் செய்ய வேண்டுமென்று சொல்வதுதான் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவைமுன் உள்ள பிரச்சினை: "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975–ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1975), பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு, எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதும் இல்லை.

மாண்புமிகு திரு செ. மாதவன் : துணைத் தலைவர் அவர்களே "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975–ஆம் ஆண்டு இந்தியமுத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1975) திருப்பி யனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவைமுன் உள்ள பிரச்சினை: "சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1975) திருப்பி யனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) 1975ஆம் ஆண்டு உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக் கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1975)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணைத்தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு @(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

ஒரு நில உடைமையின் அனுபோக உரிமையை நில உரிமையாளர் திரும்பப் பெறுவது பற்றிய வழக்கில் அளிக்கப்படும் தீர்ப்பை நிறைவேற்றும் நடவடிக்கைகள் நில உடைமையின் அனுபோகத்தை உரியவருக்கு ஒப்படைப்பதைப் பொறுத்தவரை நிறுத்தி வைக்க 1950-ஆம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்ற ஆணையை நிறுத்தி வைத்தல்) சட்டம் (திருவாங்கூர்-கொச்சி சட்டம் 8/1950) வகை செய்கிறது. இச் சட்டம் 25-3-1950 அன்று செயலுக்கு வந்தது. இச்சட்டத்தின் செல்திறனுடைய கால அளவு அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்தது. இது 24—9—75 அன்று செல்திறனற்றுப் போகவிருந்தது. எனவே, இதன் செல்திறன் கால அளவை மேலும் இரண்டாண்டுகளுக்கு நீட்டிப்பதென்று அரசு முடிவு செய்தது. அப்போது சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறாததால், 1975-ஆம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்று ஆணையை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 15/1975) அதிகார முறையில் வெளியிட வேண்டியது அவசியமாயிற்று. இந்த அவசரச் சட்டம் 17—9—1975ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டது. இந்தச் சட்ட முன்வடிவை ஏற்குமாறு இம் மேலவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவை துணைத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

மாண்புமிகு மேலவை துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு உடைமைகள் நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

@ ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பிரிவுகள் 2-ம், 3-ம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன. பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்): (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 35/1975) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவை துணைத்தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை: "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1975) நிறைவேற்றப்பட வேண்டும்.''

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) தமிழ்நாடு 1975–ஆம்ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1975).

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: துணைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு @(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1975) பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்''

என்று முன்மொழிகிறேன்.

மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வர்த்தகத்திலும் வாணிகத்திலும் சிறப்பு முக்கியத்துவம் உள்ளனவாயின் அறிவிக்கப்பட்ட சரக்குகளைப் பொறுத்தவரை 1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் 15–ம் பிரிவில் விதிக்கப்பட்டிருந்த 3 சதவிகித வரம்பினை அச்சட்டத்திற்கு திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்து 4 சதவீதமாக உயர்த்தி இருக்கிறது. இதன் மூலம் 1—7—1975ல் இருந்து மாநிலங்களுக்கிடையே நடைபெறும் அறிவிக்கப்பட்ட சரக்குகளின் மீதுள்ள விற்பனை வரியின் மேல் வரம்பை 4 சதவீதமாக மாநில அரசு உயர்த்த இயலும். 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் இரண்டாவது விவர அட்டவணையில் 4ம் இனத்திலுள்ள "இரும்பு எஃகு-ன் மீதுள்ள உள்ளூர் விற்பனை வரியை 1—7—1975 முதல் மூன்று சதவீதத்திலிருந்து நான்கு சதவீதமாக உயர்த்தலாமென்றும் அறிவிக்கப்பட்ட ஏனைய சரக்குகளைப் பொறுத்தவரை தற்போதைக்கு வரியை உயர்த்த வேண்டியதில்லை என்றும் இந்த அரசு முடிவு செய்தது. இந்த சட்ட முன்வடிவை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

@ 199–200 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.